# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, சனவரி மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 35.00** **தபாற் செலவு : ரூபா 12.50**

**2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங் களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்**

[2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 62/2003

**எந்தப் போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத் தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபரத்திற்கெதி ரான ஐக்கிய நாடுகள் சமவாயத்துக்கும் பிராந்திய ஒத்துழைப் புக்கான தெற்காசியக் கழகச் சமவாயத்துக்கும் இலங்கை ஒரு திறத்தவராக வந்துள்ளதோ அந்தச் சமவாயங்களுக்குப் பயன்கொடுப்பதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

(இதனகத்துப் பின்னர் ''1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களின தும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயமொன்று, வியன்னாவில் நடாத்தப்பட்ட 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1988 ஆம் ஆண்டு திசெம்பர் 20 ஆம் தேதியன்று வியன்னாவில் கையொப்பமிடப்பட்டதாத லாலும் : முன்னுரை.

(இதனகத்துப்பின்னர் ''பிஒதெக சமவாயம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) போதையூட்டும் அவுடதங்களும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களும் பற்றிய சமவாயமொன்று மாலைதீவில் நடாத்தப்பட்ட பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கழகத்தின் ஐந்தாவது உச்சிமாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1990, நவெம்பர் 23 ஆம் தேதியன்று மாலைதீவில் கையொப்பமிடப்பட்டதாதலாலும்

அத்துடன் இலங்கையானது, மேற்கூறப்பட்ட சமவாயங்களுக் கான திறத்தவரொருவராகவுள்ளதாதலால், இலங்கையில் சொல்லப்பட்ட சமவாயங்களின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப் பதற்கான சட்ட ஏற்பாட்டைச் செய்வதற்குக் கடப்பாடுடைய தாதலாலும் ; இவ்வேற்பாடு, போதையூட்டும் அவுடதங்களினதும்

# 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்

உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரம் பற்றிய சர்வதேச அம்சங்களை இலங்கையானது கையாள்வதனை இயலச்செய்வதற்கும், 1988 ஆம் ஆண்டின் சமவாயத்தின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் தரப்பட்டுள்ள பதார்த்தங்களின் இறக்குமதியையும், ஏற்றுமதியையும், பயன்பாட்டையும் கண்காணிப்பதற்கான அமைப்பு முறையொன்றைத் தாபிப்பதற்கும் அவசியமாகவுள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. (1) இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின், இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமொன்றாகச் சான்றுப்படுத்தப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள் தொடர்பில் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம் ; எவ்வாறாயினும்,—

(அ) II ஆம் பாகம் தொடர்பில் நியமிக்கப்பட்ட தேதியானது, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயம் எத்தேதியன்று இலங்கை தொடர்பில் வலுவுக்கு வருகின்றதோ அத்தேதிக்கு முன்னதாக இருத்தலாகாது ; அத்துடன்

(ஆ) III ஆம் பாகம் தொடர்பில் நியமிக்கப்பட்ட தேதியானது, போதையூட்டும் அவுடதங்களும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களும் பற்றிய பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கூழகச் சமவாயம் எத்தேதியன்று இலங்கை தொடர்பில் வலுவுக்கு வருகின்றதோ அத்தேதிக்கு முன்னதாக இருத்தலாகாது.

# 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங் களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்



## பாகம் I

### சமவாயத் தவறுகள்

2. (1) இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியிலாயினுஞ் சரி, அத்துடன் இலங்கைப் பிரசையாகவிருப்பினுஞ்சரி அல்லா விடினுஞ்சரி, வேண்டுமென்று — தவறுகள்.

(அ) எவையேனும் போதையூட்டும் அவுடதங்களை அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தத்தைத் தயாரிக்கின்ற, உற்பத்தி செய்கின்ற, பிரித்தெடுக்கின்ற, ஆயத்தஞ்செய் கின்ற, கொடைமுனைகின்ற, விற்பனைக்குக் கொடை முனைகின்ற, விநியோகிக்கின்ற, விற்பனை செய்கின்ற, ஒப்படைக்கின்ற, அதன் வழங்குகைக்கான தூரகராகச் செயலாற்றுகின்ற, அனுப்பிவிடுகின்ற, இடைப்பெயர் வில் அனுப்பிவிடுகின்ற, இடம்பெயர்கின்ற, இறக்குமதி செய்கின்ற அல்லது ஏற்றுமதி செய்கின்ற ;

(ஆ) ஏதேனும் போதையூட்டும் அவுடதத்தைத் தயாரிக்கும் நோக்கங்களுக்காக, அபின் செடியை, கொக்காப் பற்றையை அல்லது கஞ்சாத் தாவரத்தைப் பயிரிடுகின்ற;

(இ) பந்தி (அ) வில் விவரிக்கப்பட்ட நோக்கங்களில் எவற்றுக்குமாக ஏதேனும் போதையூட்டும் அவுடதத்தை அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தத்தை உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது கொள்வனவு செய்கின்ற ;

(ஈ) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலில் அல்லது II ஆம் பட்டியலில் தரப்பட்டுள்ள ஏதேனும் சாதனத்தை, பொருளை அல்லது ஏதேனும் பதார்த்தத்தை, ஏதேனும் போதையூட்டும் அவுடதத்தை அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தத்தைச் சட்ட விரோதமாகப் பயிரிடுவதில், தயாரிப்பதில் அல்லது உற்பத்தி செய்வதில் அல்லது அதற்காக அது பயன்படுத் தப்படவுள்ளதென அறிந்துகொண்டு, அதனைப் பெறு

கின்ற, உற்பத்தி செய்கின்ற, களஞ்சியப்படுத்துகின்ற, இடம்பெயர்க்கின்ற, விற்பனை செய்கின்ற, ஒப்படைக் கின்ற அல்லது விநியோகிக்கின்ற ;

(உ) பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்பவற்றில் விவரிக்கப்பட்ட செயல்களுள் எவற்றையும் ஒழுங்கு படுத்துகின்ற, ஒழுங்குசெய்கின்ற அல்லது அவற்றுக்கு நிதி அளிக்கின்ற ;

(ஊ) ஏதேனும் ஆதனம், பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்பவற்றில் விவரிக்கப்பட்ட செயலொன்றிலிருந்து அல்லது அத்தகைய ஏதேனும் செயலில் பங்குபற்றிய செயலொன்றிலிருந்து பெறப்பட்டதென, அது அவ்வாறு கொள்ளப்பட்ட, உடைமைகொள்ளப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட நேரத்தில் அறிந்துகொண்டு, அத்த கைய ஆதனத்தைக் கொள்ளுகின்ற, உடைமைகொள்ளு கின்ற அல்லது பயன்படுத்துகின்ற ;

(எ) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலில் அல்லது II ஆம் பட்டியலில் தரப்பட்டுள்ள ஏதேனும் சாதனத்தை அல்லது பொருளை அல்லது ஏதேனும்பதார்த்தத்தை, அது, ஏதேனும்போதையூட்டும் அவுடதத்தை அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த் தத்தை சட்டவிரோதமான முறையில் பயிரிடுவதில், தயாரிப்பதில் அல்லது உற்பத்தி செய்வதில் அல்லது அதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது அல்லது பயன் படுத்தப்படவுள்ளது என அறிந்துகொண்டு, அதனை உடைமைகொள்ளுகின்ற ;

(ஏ) இப்பிரிவில் விவரிக்கப்பட்ட தவறுகளுள் எவற்றையும் புரிவதற்கு அல்லது சட்டவிரோதமான முறையில் போதையூட்டும் அவுடதங்களை அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களைப் பயன்படுத்துவதற்கு எவ்வழிவகைகள் மூலமும் வேறு ஆட்களைப் பகிரங்க மாகத் தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற ;

(ஐ) ஏதேனும் ஆதனம் இப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளில் விவரிக்கப்பட்ட ஏதே னும் செயலிலிருந்து அல்லது செயல்களிலிருந்து

அல்லது அத்தகைய ஏதேனும் செயலில் பங்குபற்று கின்ற செயலிலிருந்து பெறப்படுகின்றதென அறிந்து கொண்டு, ஆதனத்தின் சட்டவிரோதமான தோற்று வாயை ஒளித்துவைக்கும் அல்லது மறைத்துக்காட்டும் அல்லது அத்தகைய ஏதேனும் செயலின் அல்லது எவை யேனும் செயல்களின் சட்ட விளைவுகளைத் தட்டிக் கழிப்பதற்கு அத்தகைய செயலை அல்லது செயல்களைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ள எவரேனுமாளுக்கு உதவும் நோக்கத்துக்காக, அத்தகைய ஆதனத்தை மாற்றுகின்ற அல்லது கைமாற்றுகின்ற ;

(ஒ) ஏதேனும் ஆதனம், இப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளில் விவரிக்கப்பட்ட ஏதேனும் செயலைப் புரிவதிலிருந்து அல்லது அத்த கைய ஏதேனும் செயலில் பங்குபற்றுவதிலிருந்து பெறப் படுகின்றதென அறிந்துகொண்டு, ஏதேனும் ஆதனத் தின் உண்மையான தன்மை, மூலம், அமைவிடம், கையுதிர்ப்பு, அசைவு, ஏதேனும் ஆதனம் தொடர்பிலான உரிமைகள் அல்லது ஏதேனும் ஆதனத்தின் சொத் தாண்மை ஆகியவற்றை ஒளித்துவைக்கின்ற அல்லது மறைத்துக் காட்டுகின்ற,

எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத்தின் முன்னர் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், பத்தாண்டுகளுக்குக் குறையாததும் பதினைந் தாண்டுகளை விஞ்சாததுமான காலத்துக்கான மறியற்றண்ட னையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

ஆயின் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ மற்றும் ஒ என்னும் பந்தி களில் குறிப்பீடுசெய்யப்பட்ட செயல்கள் இலங்கையில் புரியப்பட் டிருத்தல் வேண்டும் :

ஆயின், மேலும் மேலேயுள்ள ஏற்பாடுகள், (218 ஆம் அத்தியாய மான) நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையின் III ஆம் பாகத்தின் எத்தவறுகளுக்கு ஏற்புடைதாகின்றதோ அத்தவறுகளுக்கு ஏற்புடையதாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் தவறை –

(அ) புரிவதற்கு எத்தனிக்கின்ற ; அல்லது

(ஆ) புரிவதற்கு உடந்தையளிக்கின்ற ; அல்லது

(இ) புரிவதற்கு வேறெவரேனுமாளுடன் சதிசெய்கின்ற,

எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றப் பகர்வின்மீதான விளக்கத்தின் மீது குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், அவர் எத்தவறைப் புரிவதற்கு எத்தனித்தார் அல்லது புரிவதற்கு உடந்தையளித்தார் அல்லது புரிவதற்கு வேறெவரேனுமாளுடன் சதிசெய்தார் எனக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ, அத்தவறை அவர் புரிந்திருப்பின் அவர் ஆளாகியிருக்கக்கூடியவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவில் ''உடந்தையளித்தல்'' என்பது, தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம், 101 ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் என்பதுடன், ''சதிசெய்தல்'' என்பது, தண்டனைச் சட்டக்கோவையின் 113அ என்னும் பிரிவிலுள்ளவாறான அதே பொருளையும் கொண்டிருக்கும்.

(4) இப்பிரிவின் கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளுக்குத் தண்டனை விதிப்பதில், நீதிமன்றமானது, பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும் :—

(அ) தவறாளர் எந்த ஒழுங்கமைவான குற்றவியல் குழுவைச் சேர்ந்துள்ளாரோ அந்த ஒழுங்கமைவான குற்றவியல் குழு அத்தவறு புரியப்படுவதில் சம்பந்தப்பட்டிருத்தல்;

(ஆ) வேறெவையேனும் சர்வதேச ஒழுங்கமைவான குற்றவியல் செயற்பாடுகளில் தவறாளர் சம்பந்தப்பட்டிருத்தல் ;

(இ) அத்தவறு புரியப்படுவதனால் வசதிப்படுத்தப்பட்ட வேறு சட்டவிரோதமான செயற்பாடுகளில் தவறாளர் சம்பந்தப்பட்டிருத்தல் ;

(ஈ) அத்தவறு புரியப்படுவதில் தவறாளரினால் வன்செயல் அல்லது படைக்கலங்கள் பயன்படுத்தப்படுதல் ;

(உ) தவறாளர் பகிரங்கப் பதவியொன்றை வகிக்கின்றா ரென்ற நிகழ்வு மற்றும் அத்தவறானது சம்பந்தப்பட்ட பதவி தொடர்பாகவுள்ளதென்ற நிகழ்வு ;

(ஊ) அத்தவறைப் புரிவதில் பராயமடையாதோர் பாதிக்கப் படுதல் அல்லது பயன்படுத்தப்படுதல் ;அத்துடன்

(எ) அத்தவறானது ஒரு மறியற்சாலையில் அல்லது ஒரு கல்விசார் நிறுவனத்தில் அல்லது சமூக சேவை நிறுவ னத்தில் அல்லது அவற்றின் உடனடிச் சுற்றாடலில் அல்லது கல்விசார், விளையாட்டுக்கள் மற்றும் சமூகச் செயற்பாடுகளுக்காகப் பாடசாலைச் சிறார்களும் மாண வர்களும் கூடுகின்ற வேறேதேனும் இடத்தில் புரியப்பட்ட தென்ற நிகழ்வு.

சட்டத்தின்கீழான தவறுகளைக் கேட்பதற்குமேல் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உரித்தாக்கப்படுதல்.

3. (1) கொழும்பில் நடைபெறும் இலங்கையின் மேல்நீதிமன்றம் அல்லது அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையின்கீழ் மேல் மகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட மாகாண மேல்நீதிமன்றம், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறை, எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தீர்மானிப்பதற்கும், வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பி னும், புறநீங்கலான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற செயலொன்று இலங்கைக்கு வெளியே புரியப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மேல்நீதிமன்றம் —

(அ) அத்தகைய செயலைப் புரிந்த ஆள், இலங்கையில் சமூக மளித்திருந்தால் ;

(ஆ) அத்தகைய செயல் இலங்கைப் பிரசையொருவரினால் அல்லது இச்சமவாயத்துக்கான திறத்தவரொருவராக வுள்ள இன்னுமோர் அரசின் நாட்டவரினால் அல்லது இலங்கையில் தமது வழமையான வதிவிடத்தைக் கொண்ட நாடற்ற ஆளொருவரினால் புரியப்பட்டால் ;

(இ) அத்தகைய செயல், தவறு புரியப்பட்ட நேரத்தில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பலொன்றுக்கெதிராக அல்லது வானூர்தியொன்றுக்கெதிராக அல்லது அவற்றின்மீது புரியப்பட்டால் ;

(ஈ) அத்தகைய செயல், தவறு புரியப்பட்ட நேரத்தில், இச்சமவாயத்துக்கான திறத்தவரொருவராகவுள்ள இன்னுமோர் அரசின் சட்டங்களின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கப்பலொன்றுக்கெதிராக அல்லது வானூர்தியொன்றுக்கெதிராக அல்லது அவற்றின்மீது புரியப்பட்டால் ;

(உ) எவ்வாள் தொடர்பாகத் தவறு புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படுகின்றதோ அவ்வாள் இலங்கைப் பிரசையொருவராகவிருந்தால் ;

(ஊ) அத்தகைய செயல், ஏதேனும் செயலைச் செய்யும்படி அல்லது செய்யாது தவிர்க்கும்படி இலங்கை அரசாங்கத்தை வலுக்கட்டாயப்படுத்துவதற்கெனப் புரியப்பட்டால்

அது, இலங்கையினுள் புரியப்பட்டது என்றாற்போன்று அத்தகைய தவறை விளங்குவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் தவறுகளுக்காகக் கைதுசெய்யப்படும் குறித்தசில ஆட்களுக்குள்ள உரிமைகள்.

4. இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கெனக் கைதுசெய்யப்படுமிடத்து, அப்போது, அவர் –

(அ) எந்த அரசின் நாட்டவராகவுள்ளாரோ அல்லது எந்த அரசு அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேறு வகையில் உரித்துடையதாகவுள்ளதோ அந்த அரசின் அல்லது அவர் நாடற்ற ஆளொருவராகவிருப்பின் எந்த அரசுக்கு அவர் வேண்டுகோள்விடுத்து, அது, அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உடன்படுகின்றதோ அந்த அரசின் மிகக்கிட்டிய தோதான பிரதிநிதியுடன் தாமதமின்றித் தொடர்புகொள்வதற்கும் ; அத்துடன்

(ஆ) அந்த அரசின் பிரதிநிதியொருவர் அவரை வந்து பார்ப்பதற்கும்.

உரித்துடையவராதல் வேண்டும்.

**5.** இரண்டாம் பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக் கொன்றில், ஏதேனும் பொருள் அல்லது பதார்த்தம், 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அல்லது பிஒதெக சமவாயத்தின் I ஆம் பட்டியலில் அல்லது II ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட போதையூட்டும் அவுடதமொன்றாக அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தமொன்றாக உள்ளதாவென்பது பற்றிய கேள்வி எழுகின்றவிடத்து, அத்தகைய பொருள் அல்லது பதார்த்தம், 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அல்லது பிஒதெக சமவாயத்தின் I ஆம் பட்டியலில் அல்லது IIஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட போதையூட்டும் அவுடத மொன்றாக அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தமொன் றாக உள்ளதென்ற பொருள்பட அரசாங்கப் பகுப்பாய்வாளரி னாலான அறிக்கையொன்று, சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாகவிருத்தலும் வேண்டும். சான்று.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "அரசாங்க பகுப்பாளர்" என்பது, மேலதிக அரசாங்கப் பகுப்பாளரை, ஒரு பிரதி அரசாங்க பகுப்பாளரை, ஒரு சிரேட்ட அரசாங்க பகுப்பாளரை அல்லது ஓர் உதவி அரசாங்க பகுப்பாளரை உள்ளடக்குதல் வேண்டும்.

**6.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளுக் கெதிராக மேல்நீதிமன்றத்தில் செய்யப்படும் குற்றப்பகர்வின் மீது— கைப்பற்றுதலும் முடக்கிவைத்தலும்.

(அ) தவறானது எந்தப் பொருள் அல்லது பதார்த்தம் சம்பந்தமாகப் புரியப்பட்டதோ அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதில் பயன்படுத்தப்பட்டதோ அல்லது சம்பந்தப்பட்டதோ அந்தப் பொருள் அல்லது பதார்த் தம் ;

(ஆ) அத்தகைய தவறின் வரும்படிகள்,

அத்தகைய குற்றப்பகர்வு கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து, அதற்கென மேல்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, விடயத்திற்கேற்ப, கைப்பற்றப்படுவதற்கு அல்லது முடக்கிவைக்கப்படுவதற்கு உட்பட்டதாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் பொருளை அல்லது பதார்த்தத்தைக் கைப்பற்றுதல் அல்லது வரும்படிகளை முடிக்கிவைத்தல், விளக்கம் முடிவுறும்வரை வலுவிலிருத்தல் வேண்டும்.

இழப்பிக்கப்படுதல்.

7. (1) இரண்டாம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிமன்றமானது —

(அ) தவறானது எந்தப் பொருள் அல்லது பதார்த்தம் சம்பந்தமாகப் புரியப்பட்டதோ அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதில் பயன்படுத்தப்பட்டதோ அல்லது சம்பந்தப்பட்டதோ அந்தப் பொருள் அல்லது பதார்த்தம் ;

(ஆ) அத்தகைய தவறின் வரும்படிகள்,

அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அரசுக்கு இழப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் அரசுக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்கலானது —

(அ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடெதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எக்காலப்பகுதியினுள் மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அக்காலப்பகுதி முடிவுறுவதன்மேல் ;

(ஆ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும், அத்தகைய இழப்பித்தற் கட்ட

ளையை உறுதிப்படுத்தும் அல்லது ஏற்றனுசரிக்கும் மேல்நீதிமன்றத்தின் கட்டளைக்கெதிராக மேன்முறையீடெதுவும் உயர் நீதிமன்றத்துக்குச் செய்யப்படாத விடத்தும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அத்தகைய கட்டளைக்கெதிராக எக்காலப்பகுதியினுள் உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அக்காலப்பகுதி முடிவுறுவதன்மேல் ; அல்லது

(இ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும், முதற் குறிப்பிடப்பட்ட மேன்முறையீட்டின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும், இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது ஏற்றனுசரித்து உயர்நீதிமன்றத்தினாற் செய்யப்பட்ட தீர்மானத்தின் மேல்,

பயனுடையதாதல் வேண்டும்.

(3) ஏதேனும் வங்கியில் ஏதேனும் கணக்கின் வரவுக்கிருக்கும் எவையேனும் நிதிகள் அத்தகைய தவறின் வரும்படிகளாகவுள்ளனவென (2) ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்கான விளக்கமொன்றில் முன்வைக்கப்பட்ட சான்றின்மீது ஒரு நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, அது, எழுத்திலான கட்டளைமூலம், அத்தகைய தவறுக்கான விளக்கம் முடிவுறும்வரை, அக்கணக்கிலிருந்து எவையேனும் நிதிகளை மீளப்பெறுவதனை அனுமதிப்பதிலிருந்து அல்லது அதற்கு இடங்கொடுப்பதிலிருந்து அத்தகைய வங்கியின் முகாமையாளரைத் தடைசெய்யலாம்.

8. இரண்டாம் பிரிவின்கீழான தவறொன்று, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும், பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாகவிருப்பதாகவும், மற்றும் பிணையில் விடுபடற்பாலதல்லாத தவறொன்றாகவிருப்பதாகவும் கருதப்படுதலும் வேண்டும். தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாக விருத்தலும் பிணையில் விடுபடற்பாலனவல்லாதனவாக விருத்தலும் வேண்டும்.

## பாகம் II

## போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் தார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம்

### அத்தியாயம் I

### போதையூட்டும் அவுடதங்களும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களும்

*சமவாயத்துக்கான திறத்தவர்கள்.*

9. அமைச்சரானவர், காலத்துக்குக்காலம், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயத் துக்குத் திறத்தவர்களாகவுள்ள நாடுகளைச் சான்றுப்படுத்தலாம். இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கட்டளையொன்று எந்நாடு தொடர்பில் வலுவிலுள்ளதோ அந்நாடு, "சமவாய நாடொன்று" என இதன கத்துப்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்திற் குறிப்பீடு செய்யப் படுகின்றது.

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தைத் திருத்துதல்.*

10. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம், அச்சட்டத்துக்கான அட்டவணையில், அதன் பாகம் ஆ விற்கு உடன்முன்னர் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின் றது :—

"(52) 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத் திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் (அதாவது 1988 ஆம் ஆண்டு திசெம்பர் 20 ஆம் தேதியன்று வியன்னாவில் கையொப்பமிடப்பட்ட, 1988 ஆம்

**2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் 13 அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங் களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்**

ஆண்டின் போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று.".

மீள ஒப்படைத்தற் சட்டம் தொடர்பான பொருள் கோடல்

11. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்துக்கான அட்டவணையின் பாகம் ஆ விலும் இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட தவறொன்று, இலங்கைக்கும் ஒரு சமவாய நாட்டுக்கும் இடையேயுள்ளவாறு, அத்தகைய ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை அச்சட்டத்தின்கீழ் மீள ஒப்படைக்கும் நோக்கத்துக்காக மட்டும் பொதுவருவாய்சார் தவறொன்றாக, அல்லது அரசியற்றன்மையினதான தவறொன்றாக அல்லது ஓர் அரசியற்றவறுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாக அல்லது அரசியல் உள்நோக்கங்களினால் உந்தப்பட்ட தவறொன்றாகக் கருதப்படுதலாகாது.

இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள தவறுகளுக்கு மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடுகள் ஏற்பாடு செய்வனவாகக் கருதப்படுதல்

12. இலங்கை அரசாங்கத்துக்கும் ஒரு சமவாய நாட்டுக்கும் இடையே மீள ஒப்படைப்பதற்கான ஒழுங்கேற்பாடொன்று வலுவிலுள்ளவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

அமைச்சர், இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள தவறுகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சமவாயத்தை இலங்கைக்கும் சமவாய நாட்டுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடாகக் கொள்ளலாம்.

13. இலங்கை அரசாங்கத்துக்கும் ஒரு சமவாய நாட்டுக்கும் இடையே மீள ஒப்படைப்பதற்கான ஒழுங்கேற்பாடெதுவும் வலுவில் இல்லாதவிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஐக்கிய நாடுகள் சமவாயத்தை, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைப்பதற்கு ஏற்பாடுசெய்து, இலங்கை அரசாங்கம் அத்தகைய சமவாய நாட்டுடன் செய்துகொண்ட மீள ஒப்படைப்பதற்கான ஒழுங்கேற்பாடாகக் கொள்ளலாம்.

அந்த ஆட்களை மீள ஒப்படைத்தற்கான வேண்டுகோளொன்று விடுக்கப்படுகின்றபோது அந்த ஆட்களுக்கெதிராக எடுக்கப்பட்ட வழிமுறைகளை வேண்டுகோள் விடுக்கும் அரசுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக்குள்ள கடமை.

**14.** இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீள ஒப்படைப்பதற்காக ஒரு சமவாய நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காக அல்லது அவ்வாளை மீள ஒப்படைப்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகளை வேண்டுகோள் விடுக்கும் அரசின் அரசாங்கத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

சமவாய நாடுகள் முதலியவற்றுக்கான உதவி.

**15.** (1) இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியற் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான தவறொன்றை அல்லது இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கும் அதற்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்கும் அவசியமானவிடத்தெல்லாம், இலங்கை அரசாங்கத்துக்கும், ஒன்றில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவரசு நாடுகளாகவுள்ள அல்லது இலங்கை அரசாங்கம் எந்தப் பொதுநலவரசு நாடுகளல்லாத நாடுகளுடன் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதோ அந்த நாடுகளாகவுள்ள ஏனைய அரசுகளுக்கும் உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவரசு நாடொன்றாகவிராத அல்லது இலங்கை அரசாங்கம் எந்தப் பொதுநலவரசு நாடொன்றல்லாத நாட்டுடன் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி உடன்படிக்கையொன்றைச் செய்து

கொண்டுள்ளதோ அந்த பொதுநலவரசு நாடொன்றாகவிராத நாடொன்றின் விடயத்தில், அப்போது, (சான்றையும் கூற்று களையும் எடுத்தல், மன்றாணை முதலியன சேர்ப்பித்தல் மற்றும் தேடுகைகளை நடாத்துதல் என்பன தொடர்பான உதவியுட்பட) ஐக்கிய நாடுகள் சமவாயத்தின்கீழான அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அளவுக்கு, 2 ஆம் பிரிவின் கீழான தவறொன்றைப் புலனாய்வுசெய்து அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு சமவாய நாடொன்றுக்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய எல்லா உதவியையும் அளித்தல் அரசாங்கத்தின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், ஒரு சமவாய நாட்டிடமிருந்து அத்தகைய எல்லா உதவியையும் அளிக்கு மாறு அமைச்சரின் மூலம் அரசாங்கம் வேண்டுகோள் விடுக்க லாம்.

(3) ஒரு சமவாய நாட்டுக்கு உதவியளித்தலானது, அமைச்சர் தகுதியானவையென எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய செய்யப்படலாம்.

**16.** இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக — II ஆம் பாகத்தின் I ஆம் அத்தியாத்துக்கான பொருள்கோடல்.

“போதையூட்டும் அவுடதம்” என்பது, 1961 ஆம் ஆண்டின் போதையூட்டும் அவுடதங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் I ஆம், II ஆம், IV ஆம் அட்டவணை களில் உள்ளடக்கப்பட்டதும், இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின் றதுமான ஏதேனும் அவுடதம் என்று பொருளாகும் ;

“உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தம்” என்பது, 1971 ஆம் ஆண்டின் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள் பற்றிய சமவாயத்தின் I ஆம், II ஆம், III ஆம், IV ஆம் அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டதும், சட்டத்துக் கான நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்படு கின்றதுமான இயற்கையான அல்லது செயற்கையான ஏதேனும் பதார்த்தம் அல்லது ஏதேனும் இயற்கையான பொருள் என்று பொருளாகும்.

## அத்தியாயம் II

**முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையைத் தாபித்தலும். போதையூட்டும் அவுடதங்களினது அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினது சட்டமுரணான உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டவையும் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்டவையுமான பதார்த்தங்கள்**

சமவாயநாடு.

**17.** இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக சமவாய நாடு என்பது, 9 ஆம் பிரிவின் நோக்கங்களுக்குக்காகச் சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் நாடாகவிருத்தல் வேண்டும்.

முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை, இப்பாகத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**18.** இச்சட்டத்தின் இப்பாகத்தினது ஏற்பாடுகளை நிருவகிக்கின்ற பொறுப்புச் சுமத்தப்பட்டதும், (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையொன்றாக ஆளை அல்லது ஆட்கள் குழுமத்தை அமைச்சர் நியமித்தல் வேண்டும். இவ்வதிகாரசபையானது சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள் தொடர்பில், சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய முறையில் 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் ஏற்பாடுகளினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறு மேற்கூறப்பட்ட பதார்த்தங்களின் உற்பத்தியையும் விநியோகிப்பையும் கண்காணிப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வழிமுறைகளை இலங்கையினுட் செயற்படுத்துதல் வேண்டும்

அதிகாரசபையின் கடமைகள்.

**19.** அதிகாரசபையானது —

(அ) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களை இறக்குமதி செய்வதற்கு அல்லது ஏற்றுமதிசெய்வதற்கு நாடுகின்ற ஆட்கள், முறையான கைத்தொழில்களின் தேவைப்பாடுகளைக் கவனத்துட் கொண்டு, விதித்துரைக்கப்பட்ட முறையில் செல்லுபடியானவோர் உரிமத்தின் நியதிகளின்படி அவ்வாறு செய்வதனையும் ;

(ஆ) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி தொடர்பான செயற்பாடுகளை உரிமம்பெற்றவர் எந்த வளவுகளிலிருந்து கொண்டுநடாத்துவாரோ அந்த வளவுகளைப் பதிவுசெய்வதற்கு அவசியமானவாறான அத்தகைய வழிமுறைகளை எடுப்பதனையும் ;

(இ) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள், அவை எந்த நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படுகின்றனவோ அல்லது ஏற்று மதிசெய்யப்படுகின்றனவோ அந்நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதனையும் ;

(ஈ) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களைப் பயன்படுத்தி ஏதேனும் போதை யூட்டும் அவுடதத்தின் அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களின் சட்டமுரணான உற்பத்தி உரியமுறை யில் அறிக்கையிடப்பட்டு தவறாளர்களைத் தண்டிப்ப தற்குத் தோதான நடவடிக்கை எடுக்கப்படுவதனையும் ;

(உ) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களுள் எவற்றினதும் ஒவ்வோர் இறக்குமதி யாளரும் அல்லது ஏற்றுமதியாளரும், அத்தகைய பதார்த்தங்களின் இறக்குமதி, ஏற்றுமதி, பயன்பாடு, உற்பத்தி, மற்றும் விநியோகிப்பு என்பவற்றைப் பிரதி பலிக்கின்ற காலாண்டு விபரத்திரட்டுக்களை அதிகார சபைக்குச் சமர்ப்பிப்பதனையும் ;

(ஊ) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களுள் எவைதொடர்பிலும் சந்தேகத்துக்கிட மான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் விபரங்

கள், அத்தகைய பதார்த்தங்களுள் எவற்றினதும் உற்பத்தி, ஏற்றுமதி அல்லது இறக்குமதி என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆட்களினால் தாமதமின்றி அதிகார சபைக்கு அறிவிக்கப்படுவதனையும் ;

(எ) விதித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றி முறையான பதிவேடுகள் பேணப்படுவதனையும் அத்தகைய செயற்பாடுகளும் பதிவேடுகளும் விதித்துரைக்கப்பட்ட முறையில் கண்காணிக்கப்படுவதனையும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

I ஆம் பட்டியலிலும் IIஆம் பட்டியலிலும் உள்ள எல்லாப் பதார்த்தங்களும் உரிமமொன்றின் மீது இறக்குமதி செய்யப்படுதல் அல்லது ஏற்றுமதி செய்யப்படுதல் வேண்டும்.

**20.** (1) ஆளெவரும், சட்டத்துக்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை, விதித்துரைக்கப்பட்ட முறையில் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதிச் சட்டத்தின் நியதிகளின்படி அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, இறக்குமதி செய்தலோ அல்லது ஏற்றுமதி செய்தலோ ஆகாது.

(2) இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர், சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை இறக்குமதிசெய்வதற்கான அல்லது ஏற்றுமதி செய்வதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தைப் பெற்றதன்மேல், எந்தப் பதார்த்தங்களும் அவற்றின் அளவுகளும் தொடர்பில் விண்ணப்பஞ் செய்யப்படுகின்றதோ அந்தப் பதார்த்தங்களும் அவற்றின் அளவுகளும் முறையான கைத்தொழிலின் தேவைப்பாடுகளுக்கு இசையவுள்ளனவென்ற பொருள்பட்ட புறக்குறிப்பொன்றுக்காக அத்தகைய விண்ணப்பத்தை அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, அதன் புறக்குறிப்பை, விண்ணப்பம் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களினுள் அனுப்புதல் வேண்டும். புறக்குறிப்பானது, ஒவ்வோர் இறக்குமதி

யாளரினாலும் அல்லது ஏற்றுமதியாளரினாலும் அதற்குச் சமர்ப் பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுக்களின் அடிப்படையில் சரிபார்க்கப்பட்ட முறையான கைத்தொழில்களின் உண்மையான தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர், அதன் மேல், விண்ணப்பமும் புறக்குறிப்பும் எவ்வுரிமம் தொடர்பான வையோ அவ்வுரிமத்தை வழங்குதல் வேண்டும் அல்லது கூறப் பட்ட காரணங்களுக்காக வழங்க மறுத்தல் வேண்டும்.

(5) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத்தின் முன்னரான குற்றப்பத்திரத்தின்மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், மூன்றாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாதது மான காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படு தலும் வேண்டும்.

பதிவேடுகளைச் சோதனையிடுதல்.

**21.** (1) அதிகாரசபையானது, உரிய அறிவித்தலின் பின்னர் நியாயமான எல்லா நேரங்களிலும், சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் Iஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி, பயன்பாடு, உற்பத்தி மற்றும் விநியோகிப்பு என்பன தொடர்பான செயற்பாடுகளை உரிமம்பெற்றவர் கொண்டு நடாத்தவுள்ள வளவுகளினுட் பிரவேசிப்பதற்கும் அவற்றைச் சோதனையிடுவதற்கும், அவை தொடர்பாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் சாதனத்தைச் சோதனையிடவும் அல்லது வைத்திருக் கப்படும் புத்தகங்களை, ஆவணங்களை அல்லது வேறு பதிவேடு களைப் பார்வையிடவும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் நியதிகளின்படி அதிகாரசபையானது அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் அதனை எதிர்க்கும் அல்லது அதற்கு முட்டுக்கட்டையிடும் எவரேனுமாள் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத் தின் முன்னரான குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மாதத்துக்குக் குறையாத தும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

ஐயங்களைத் தவிர்த்தல்.

**22.** ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இப்பாகத்தின் ஏற்பாடுகள், சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பட்டியலிலும் IIஆம் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள் இலகுவாகப் பயன்படுத்தப்பட முடியாத அல்லது மீட்டுப் பெறப்பட முடியாத அத்தகையவொரு வழியில் கலக்கப்படுகின்ற, அத்துடன் பொதுச் சுகாதாரத்துக்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு தொகையிலான, அத்தகைய பதார்த்தங்களைக் கொண்டுள்ள மருந்தாக்கல் தயாரிப்புகளுக்கோ அல்லது ஏனைய தயாரிப்புகளுக்கோ ஏற்புடையனவாதலாகாதென இத்தால் கூறப் படுகின்றது.

## பாகம் III

## போதையூட்டும் அவுடதங்களும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களும் பற்றிய பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய கழகச் சமவாயம்

குறித்தசில பிறதேச அரசுகளுடன் ஏலவேயுள்ள மீள ஒப்படைப்பதற்கான ஒழுங்கேற்பாடுகள் இரண்டாம் அட்டவணை யிலுள்ள தவறுகளுக்காக ஏற்பாடு செய்கின்றனவாகக் கருதப்படுதல்.

**23.** இலங்கை அரசாங்கத்தினால் இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அரசுடன் செய்யப் பட்டதும், இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று வலுவிலுள்ளதுமான மீள ஒப்படைப்பதற்கான ஒழுங் கேற்பாடொன்று இருக்குமிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணை யில் விவரிக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைப்பதற் கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தைத் திருத்துதல்.

**24.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாமாண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம், அச்சட்டத்துக்கான அட்டவ ணையில், அதன் பாகம் ஆ வின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"(53) 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த் தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் (அதாவது 1990, நவெம்பர்

23 ஆம் தேதியன்று மாலைதீவில் கையொப்பமிடப்பட்ட, போதையூட்டும் அவுடதங்களும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களும் பற்றிய பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கழகச் சமவாயத்தின் நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று.".

25. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று வலுவிலுள்ள இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அரசுடன் இலங்கை அரசாங்கத்தினாற் செய்யப்பட்ட மீள ஒப்படைப்பதற்கான ஒழுங்கேற்பாடெதுவும் இல்லாதவிடத்து, அமைச்சரானவர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறுகள் தொடர்பில், மீள ஒப்படைப்பதற்கான ஏற்பாடுசெய்து அவ்வரசுடன் இலங்கை அரசாங்கத்தினாற் செய்யப்பட்ட மீள ஒப்படைப்பதற்கான ஒழுங்கேற்பாடொன்றாகச் சமவாயத்தைக் கொள்ளலாம்.

*அட்டவணையிலுள்ள தவறுகள் தொடர்பில், இலங்கைக்கும் ஒரு பிறதெக அரசுக்கும் இடையேயான மீள ஒப்படைப்பதற்கான ஒழுங்கேற்பாடொன்றாக அமைச்சர் சமவாயத்தைக் கொள்ளலாம்.*

26. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாமாண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்துக்கான அட்டவணையின் பாகம் ஆ வின் பந்திகள் (ஊ) மற்றும் (எ) என்பவற்றிலும், இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட தவறொன்று, இலங்கைக்கும் இச்சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவோர் அரசுக்கும் இடையேயுள்ளவாறு அத்தகைய ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை அச்சட்டத்தின்கீழ் மீள ஒப்படைக்கும் நோக்கங்களுக்காக மட்டும், பொது வருவாய்சார் தவறொன்றாக, அல்லது அரசியற்றன்மையினதான தவறொன்றாக அல்லது ஓர் அரசியற்றவறுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாக, அல்லது அரசியல் உள்நோக்குகளினால் உந்தப்பட்ட தவறொன்றாகக் கருதப்படுதலாகாது.

*பொருள்கோடல்.*

எவ்வாட்களை மீள ஒப்படைப் பதற்கான வேண்டுகோள் விடுக்கப்படு கின்றதோ அவ்வாட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றி வேண்டுகோள் விடுக்கும் நாட்டுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக்குள்ள கடமை.

27. (1) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீள ஒப்படைப்பதற்காக இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட அரசசொன்றின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, அமைச்சரானவர், இலங்கை அரசாங்கத் தின் சார்பில், அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராகக் குற்ற வழக்குத் தொடுப்பதற்காக அல்லது அவரை மீள ஒப்படைப்ப தற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகள் பற்றி வேண்டுகோள் விடுக்கும் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக் கப்பட்ட அரசொன்றின் அரசாங்கத்தினால் அச்சட்டத்தின்கீழ் எவரேனுமாளை மீள ஒப்படைப்பதற்கான ஒரு வேண்டுகோளைப் பின்பற்றி இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அவ்வாளை மீள ஒப்படைப்ப தற்காக 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின்கீழான கட்டளையெதுவும் ஆக்கப்படலாகாதென முடிபு செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் எந்தத் தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அந்தத் தவறுக்கான குற்றவழக்கு அல்லது தோதான வேறு நடவடிக்கை கவனத்துட் கொள்ளப்படக் கூடிய வகையில் அவ்விடயமானது இயைபான அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பிறதெக அரசுகளுக்கான உதவி.

28. (1) இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியற் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடு கள், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான தவறொன்றை அல்லது இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கும், அதற்கெதிராகக் குற்ற வழக்குத் தொடுப்பதற்கும் அவசியமானவிடத்தெல்லாம், இலங்கை அரசாங்கத்துக்கும், இலங்கை அரசாங்கம் மேற்கூறப்

பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட எந்த அரசுடன் உடன் படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதோ அந்த அரசுக்கும் இடையேயுள்ளவாறு உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(2) ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட எந்த அரசு டன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளவில்லையோ அந்த அரசொன்றின் விடயத்தில், (சான் றையும் கூற்றுக்களையும் எடுத்தல், மன்றாணை முதலியன சேர்ப் பித்தல் மற்றும் தேடுகைகளை நடாத்துதல் என்பன தொடர்பான உதவியுட்பட), சமவாயத்தின்கீழ் அதன் கடப்பாடுகளை நிறை வேற்றுவதற்குத் தேவைப்பட்ட அளவுக்கு 2 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கும் அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறாக, இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட அரசின் இயைபான அதிகாரிகளுக்கு அத்தகைய எல்லா உதவியை யும் அளித்தல் அரசாங்கத்தின் கடமையாதல் வேண்டுமென்பது டன், அவ்வதிகாரிகளிடமிருந்து அத்தகைய எல்லா உதவியையும் அளிக்குமாறும் அமைச்சரின்மூலம் அது வேண்டுகோள்விடுக்க லாம்.

(3) ஒரு சமவாய நாட்டுக்கு உதவியளித்தலானது, அமைச்சர் தகுதியானவையென எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய செய்யப்படலாம்.

## பாகம் IV

### நானாவிதமானவை

29. இச்சட்டத்தின் 3,4,5,6,7,8 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், சட்டத்தின் II ஆம், III ஆம் பாகங்களின் ஏற்பாடுகளுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3,4,5,6,7,8 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், IIஆம், IIIஆம் பாகங்களுக்கு ஏற்புடையனவாதல்.

பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

30. (1) பாராளுமன்றமானது, தீர்மானத்தின்மூலம், 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் I ஆம் பட்டியலுக்கும் II ஆம் பட்டியலுக்கும் செய்யப்பட்ட மாற்றங்களுக்குப் பயன்கொடுப்பதற்கென, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையை, அதற்கான I ஆம் பட்டியலுக்கு அல்லது II ஆம் பட்டியலுக்கு ஏதேனும் பதார்த்தத்தைச் சேர்ப்பதன்மூலம், அல்லது மேற்கூறப்பட்ட பட்டியல்களிலிருந்து ஏதேனும் அவுடதத்தை விட்டுவிடுவதன்மூலம், அல்லது ஒரு பட்டியலிலிருந்து மற்றொன்றுக்கு ஏதேனும் பதார்த்தத்தைக் கைமாற்றுவதன்மூலம் திருத்தலாம்.

(2) அட்டவணையைத் திருத்துவதற்கு நாடுகின்ற தீர்மானம், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கிணங்கப் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதன்மேல், அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தத்தைச் சுட்டிக்காட்டுகின்ற அத்தகைய முறையில் தீர்மானத்தின் உள்ளீட்டைத் தந்து, வர்த்தமானியில் அறிவிப்பொன்றை வெளியிடுதல் வேண்டும்.

ங்குவிதிகள்.

31. (1) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்துக்காக அல்லது இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக அமைச்சர் இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் —

(அ) 19 ஆம், 20 ஆம் பிரிவுகளின்கீழ் உரிமங்களுக்கான விண்ணப்பங்களும் வளவுகளுக்கான பதிவும் செய்யப்பட வேண்டிய முறை, அத்தகைய நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள் மற்றும் இறுக்கப்பட வேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) பின்வருவன பற்றிய விபரங்களுட்பட 19 ஆம். 20 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி இறக்குமதியாளர்களினா லும் ஏற்றுமதியாளர்களினாலும் பேணப்படவேண்டிய இடாப்புகளும் பதிவேடுகளும் :—

(i) இறக்குமதியாளர்களின் அல்லது ஏற்றுமதி யாளர்களின் பெயர்களும் முகவரிகளும் இயன்ற விடத்து அனுப்புபொருட் பெறுநர்களின் பெயரும்;

(ii) அளவுகளின் விபரங்களுடன் இறக்குமதி செய்யப் படுகின்ற அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற பதார்த்தத்தின் பெயர் ;

(iii) பதார்த்தங்களின் நுழைவிடங்களும் அனுப்பு கைத் தேதிகளும் ;

(iv) பதார்த்தமானது குறிப்பிட்ட எந்தக் கைத்தொழி லுக்காக இறக்குமதி செய்யப்படுகின்றதோ அந்தக் கைத்தொழில் தொடர்பான நோக்கம் ;

(இ) 1988 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் I ஆம் பட்டியலிலும் II ஆம் பட்டியலிலும் உள்ளடக் கப்பட்ட பதார்த்தங்களின் இறக்குமதிகள், ஏற்றுமதிகள், பயன்பாடு, உற்பத்தி மற்றும் விநியோகிப்பு என்பனவற் றின் விபரங்களைப் பிரதிபலிக்கின்றவையும், 20 ஆம் பிரிவின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்படவேண்டிய காலாண்டு விபரத்திரட்டுக்களில் உள்ளடக்கப்பட்டவை யுமான கருமங்கள் ; அத்துடன்

(ஈ) கண்காணிக்கும் முறையும், சட்டத்தில் குறித்துரைக்கப் படும் செயற்பாடுகளையும் பதிவேடுகளையும் கண் காணிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களும்.

